ஆக்கம்: ஆசிரியை T.பேபி ஷாலினி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

காளைக் கன்றுக்குட்டி ஓடியாடித் திரிந்து விட்டு தன் தாயருகில் வந்து நின்றது. அதன் தோழனாக குமரனும் கன்றுக் குட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு பசுவின் அருகில் வந்தான். பசு இருவரையும் மாறி மாறிப் பார்த்தது. இரண்டு குழந்தைகளுமே தன் குழந்தைகள் என்பது போல நாக்கால் குமரனையும், கன்றுக் குட்டியையும் மாறி மாறித் தடவிக் கொடுத்தது. இரண்டு மூன்று நாட்கள் சென்றன. காளைக் கன்றுக்குட்டிக்கு கழுத்து சங்கிலியோடு வாய்பூட்டான கூடையும் கிடைத்தது. அதனால் நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை. பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக்குட்டியை அவிழ்த்து விடும் மாடசாமி சரியாக பால் சுரந்து அதன் வாய்க்கு வரும் நேரத்தில் அதை இழுத்துப் பிடித்துக் கட்டிவிட்டு கறக்கத் தொடங்குவான். அவன் கறந்து முடித்து விட்டு அவிழ்த்து விடும் போதே மடியில் ஒரு சொட்டுப் பால் கூட மீதமிருக்காது. கன்றுக்குட்டி முட்டிப் பார்க்கும், மோதிப்பார்க்கும், கதறிப் பார்க்கும், இந்த துடிப்பைக் காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித் தொண்டையிலிருந்து குரல் எழுப்பும். குறுக்கே நிற்கும் சுவரில் தன் கொம்புகளை அது மோதுவதும் உண்டு.தாய் பசுவுக்கோ இந்த வேதனைகளைத் தாங்கவே முடிவதில்லை. அதனால் என்ன செய்ய முடியும்? கன்றுக் குட்டியின் கன்னங்கரிய பெருவிழிகள் இரண்டுமே ஒளி இழந்து வந்தன ஸ்ரீ. அதனால் துள்ளவும் முடியவில்லை, குதிக்கவும் முடியவில்லை, தளதளவென்று சதைப் பிடிப்போடு இருக்க வேண்டிய மேனியில் எலும்புக்கு கூடு புறப்படத் தொடங்கியது.

1. தாய்பசுவின் தூய்மை உணர்வு வெளிப்படும் தன்மையினை எடுத்துரைக்க?
2. மாடசாமியின் சுயநலம் மிகுந்த செயல் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
3. கன்றுக் குட்டியின் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?
4. கன்றுக் குட்டியின் அவலம் எவ்வாறு கட்டப்பட்டுள்ளது?
5. காளை குறுக்கே இருக்கும் சுவரில் தன் கொம்புகளை மோதக் காரணம் யாது?